314

மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. IV புத்தகம் ௪.	Madras: November 1902. சென்னபட்டணம், 1902 நவம்பர் ௴	No. 9. இல. ௯.

புத்தக வரவு.

இங்கிலீஷ் பாஷையில் ரொமான்ஸ் என்று சொல்லப்படும் கதைகளைப் பின்பற்றி நம் பண்டிதர் நடேச சாஸ்திரியாரால் தமிழ் நடையில் எழுதப்பட்டது இப்புத்தகம். இத்தகைய புத்தகங்கள் அதிகமாய் நமது தாய் பாஷையில் கிடையாதென்றே சொல்லலாம். இப்புத்தகத்தில் "இரண்டு சகோதரிகள் முதுமைப் பருவம் நீங்கி தாங்கள் 25 வயதுப் பருவமுள்ள கட்டழகிகளாக ஒரு மருந்து கண்டறிந்து அதைத் தங்களுக்குள்ளேயே ரகசியமாய் வைத்துக்கொண்டு ஒருவித ஆபத்தால் அம்மருந்து முழுவதையும் ஒருவரே அருந்திக்கைக்குழந்தையானதும், அவளுக்கு அப்பருவத்தில் சம்பவித்த சங்கடங்களும், அப்பருவம் நீங்கி மறுபடி முன்போல் 60-வயதானதும் அவள் அடைந்த ஆநந்தமும்" இன்னும் பலவிஷயங்களும் வெகுஹாஸ்யமாய் யாவரும் அதிக கஷ்டமின்றி உணருமாறு மிக எளியநடையில் கூறப்பட்டிருக்கின்றன. இம்மாதிரிக்கதைகள் பொழுது போக்குவதற்கு மிகப் பிரயோசனப்படும் என்பதில் தடையில்லை. புத்தகத்தின் முதலில் எடுத்துக் காட்டியிருக்கும்,

கோமளம் குமரி யானது.

" வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தனபோக மவரவராற்றான்
விளங்காய் திரட்டினாரில்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாருமில்."

என்னும் நாலடிச்செய்யுளின் கருத்திற்கு ஒரு சிறந்த இலக்கியமாகக்கூறலாம் நமது சாஸ்திரியாரின் கதையை. யாவரும் இப்புத்தகத்தை வாங்கி வாசித்து ஆநந்தமடைவார்களென்று நாம் உறுதியாய் எண்ணுகின்றோம். இதன் விலை அணா பன்னிரண்டுதான். நேர்த்தியான கடிதாசியில் பைகா எழுத்தில் லாரென்ஸ் அசைலம் அச்சாபீசில் வெகு அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்பெயர்கொண்ட புஸ்தகத்தைப்பற்றி 1900 வருஷம் அக்டோபர்ஸ்ரீ பத்திரிகையில் நமது அபிப்பிராயத்தை வெளியிட்டோம். இப்பொழுது

தீனதயாளு. இந்நூலாசிரியராகிய பிரமஸ்ரீ பண்டிதர் எஸ். எம். நடேச சாஸ்திரியாரவர்கள் இரண்டாம் பதிப்பாக இதை ஆங்கில நாவல்களைப்போல உயர்ந்த வெண்மையானவும் பளபளப்புமுள்ள கடிதாசியில் பைகா என்ற பெரிய எழுத்தில் லாரன்ஸ் அசைலம் அச்சியந்திர சாலையில பதிப்பித்திருக்கிறார். இதில் 200-பக்கங்களுள. இதில் தந்தி சமாசாரக் குழப்பம் என்ற முதல் அத்தியாயம் ஆங்கில நாவல்களில் எவ்விதம் முதல் அத்தியாயமாயிருக்குமோ அவ்விதமே யிருக்கிறது. இது நமது ஜனங்களுக்குப் புதுமையாக விருக்கினும் கதாநாயகன் கதாநாயகிகள் எவர்களென்பதையும் கதையின் முடிவு என்ன என்பதையும் செவ்வனே அறிந்துகொள்வதற்காக ஒவ்வொருவரும் மிகஆவலுடன் மற்ற அத்தியாயங்களைப் படிக்க ஆரம்பிப்பார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

தமிழில் நாவல் எழுதி ஜனங்களுக்கு அபிருசியை யுண்டாக்கியவரில் நமது சாஸ்திரியார்தான் முதல்வர்.

இதை ஒவ்வொருவரும் வாங்கி வாசித்தால் அநேக உலக வியவகாரங்களும், குடும்பத்தை நடத்தவேண்டிய மாதிரிகளும், விடாமுயற்சி ஒவ்வொருவனுக்கு மிருக்கவேண்டுமென்றும் அறிந்துகொள்ளலாம். ஆனதுபற்றி இவ்விரண்டாம் பதிப்பாகிய தீனதயாளு வென்ற திவ்ய நாவலை யாவரும் வாங்கி வாசிப்பதுடன் மூன்றும் பதிப்பு அதிசீக்கிரத்தில் வெளிவருமாறு ஆசிரியருக்கு ஊக்கத்தையும் தைரியத்தையும் உண்டாக்குவது மிக நலமென நம்புகிறோம். மேலும் பாடசாலைப் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் இப்புத்தகத்தை டிஸ்டிரிக்ட் போர்டாரும், கல்வி யிலாகாவைச் சேர்ந்தவர்களும், இன்னும் மற்ற கனவான்களும் பரிசளிக்க ஏற்பாடு செய்வது உத்தமமென எண்ணுகிறோம்.

ஆசிரியர் இன்னும் மூன்று புஸ்தகங்களை அதி சீக்கிரத்தில் வெளியிடுவாரெனக் கேட்க மிகச் சந்தோஷிக்கிறோம். தமிழருக்குப் புஸ்தகங்களைப் பதிப்பித்துப் படிக்க ஊக்கத்தை உண்டாக்கிவரும் நமது ஆசிரியருக்குக் கடவுள் தேக சௌக்கியத்தையும் தீர்க்காயுளையும் அளிப்பாராக.

புஸ்தகம் வேண்டுவோர் சென்னைத் தம்புசெட்டிவீதி 273-ம் நெம்பர் மதாஸ் ரிப்பன் புஸ்தகசாலைத் தலைவருக்காவது, அல்லது சென்னை எடுகேஷனல் டிரேடிங் கம்பெனியாருக்காவது எழுதி 12-அணாவுக்கு பெற்றுக் கொள்ளலாம்.

முக்கிய அறிவிப்பு.

பாக்கியுள்ள சந்தாதாரர்கள் கூடியசீக்கிரத்தில் தங்கள் பணத்தை யனுப்புவார்களென நம்புகிறோம். பணம் சரிவர வசூலானால்தான் பத்திரிகையை விருத்திசெய்ய முக்கிய ஏற்பாடுகள் செய்யலாம்.

C. S. இராமசுவாமி ஐயர்,
புரொப்ரைடர்,
மாதர் மனோரஞ்சினி.

வி. பி. ராமானுஜலு செட்டி அண்டு கம்பெனி.



இங்கு முதல்தரமான சீமையிலிருந்து வரவழைக்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகள் அதிக சரச விலைக்குக்கொடுக்கப்படும். கண்பரீக்ஷையில் மிகத் தேர்ந்தவரால் பரீக்ஷை செய்யப்பட்டு வருகிறது.

வேண்டுவோர் சென்னை மயிலப்பெருமாள் தெருவிலிருக்கும் வி. பி. ராமானுஜலு செட்டி கம்பெனி யென்று எழுதவேண்டும்.

லண்டன் கதா சபை மெம்பர்

பண்டித நடேச சாஸ்திரியாரால் இயற்றப்பட்ட

தமிழ் நாவல்களின் வரிசை.

1. தீனதயாளு, இரண்டாம் பதிப்பு ...		0	12	0
2. கோமளம் குமரியானது		0	12	0
3. திக்கற்ற இரு குழந்தைகள்		1	4	0
4. மதிகெட்ட மனைவி		1	4	0
5. ஸ்ரீ மாமி கொலுவிருக்கை		0	8	0
6. சந்திர சேகரன்		0	8	0

சென்னை ரிப்பன் புஸ்தகசாலைக்காவது, அல்லது மதராஸ் திருவல்லிக்கேணி மாதர் மனோரஞ்சினி ஆபீஸுக்காவது எழுதவும்.

சமாசாரக் குறிப்பு.

டெல்லியில் தர்பாருக்காக இங்கிருந்து அநேக பிரபுக்களும், மகாராஜாக்களும் செல்லுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

சீனதேசத்திலிருந்து உயர்ந்த வம்சத்தைச்சேர்ந்த 8 வாலிப மாதர்கள் ஜெப்பானில் படிக்கச் சென்றிருக்கிறார்களாம்.

மைசூரிலுள்ள இரண்டு பிராமண மாதர்கள் டிசம்பர்மாதம் சென்னையில் நடக்கும் பி - ஏ - பரீட்சைக்கு ஆஜரா யிருப்பார்களெனக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

ஒரு ஐரோப்பிய டாக்டர் பாலைப் பொடிரூபமாக்கும் விதத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். இதற்குப் பாலின் குணம் முழுவதுமிருக்கிறதாம், இது கெடுவதில்லையாம், இதை நல்ல ஜலத்தில் கலந்து உபயோகிக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

நமது மகாராஜா 7-வது எட்வர்டினுடைய வண்டிக்காரனுக்கு இன்னவிடத்திற்கு வண்டியை ஒட்டிக்கொண்டு போகவேண்டுமென்று மகாராஜா அவர்கள் உட்காரும் வரையில் தெரியாதாம். இவ்வழக்கம் நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாரவர்கள் பட்டத்திற்கு வந்தது முதல் நடந்துவருகிறதாம்.

ஐரோப்பா கண்டத்தில் சில சாஸ்திரிகள் 1220-குழந்தைகளை வளர்த்து இவைகள் நடக்கும் காலத்தைப் பின்வருமாறு கண்டுபிடித்திருக்கிறார்கள்; 100-க்கு 95-குழந்தைகள் 24-மாதமானவுடன் நடக்க ஆரம்பித்தன. 100-க்கு 46-பேர் 18-மாதமானவுடனும், மூன்றிலொருபங்கு 12-மாதமானவுடனும், 100-க்கு 10-பேர் 10-மாதமானவுடனும், நடக்கஆரம்பித்தன. இவைகளில் 3-குழந்தைகள் 8-மாதத்திற்குள் நடக்க ஆரம்பித்ததாம். இவைகள் யாவற்றும் நமது மாதர்களுக்கு அநேகமாகத் தெரிந்திருக்குமென்று நம்புகிறோம்.

நமது பத்திரிகை மிகத் தாமதமாக வெளியானதைப்பற்றி மிக விசனிக்கிறோம். அக்டோபர் நவம்பர்மாதப் பத்திரிகைகளை யொன்றாகப் பிரசுரிக்க வேண்டியதைக்குறித்தும் மிக வருந்துகிறோம். ஆயினும் டிசம்பர்மாதப் பத்திரிகை கூடியசிக்கிரத்தில் வெளிவரும். ஜனவரிமாதப் பத்திரிகையில் அடியில் வரும் சித்திரப்படங்கள் அடங்கியிருக்கும். நமது 7-வது எட்வர்டு மகாராஜா அவர்கள், அலக்ஸாண்டிரியா மகாராணியாரவர்கள், பிரின்ஸ் ஆப் வேல்ஸ், பிரின்ஸஸ் ஆப்வேல்ஸ், லார்டு கர்ஸன்ங்கள், லேடி கர்ஸன், லார்டு அண்டு லேடி ஆம்தில், தமயந்தி, ராதா, டெல்லிபடம்.